கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பள்ளியைத் தரம் உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதற்குத் தனிக் கேள்வி போட்டால்தான் உரிய பதில் அளிக்க இயலும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

108—

நூலகம் மற்றும் சுற்றுச் சுவர்

***5729—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியிலுள்ள சுப்பிரமணிய சிவா நினைவு மண்டபத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டவும், நூலகம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையை தங்கள் அனுமதியுடன் அளிக்கிறேன்.*

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் அமைக்கப்பட்டுள்ள தியாகி சுப்பிரமணிய சிவா நினைவு மண்டபத்தில் நூலகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், அந்நினைவு மண்டபத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டுதல் தொடர்பான கருத்துரு பற்றி திட்ட மதிப்பீடுகள் பெற்று பரிசீலிக்கப்படும்.

2012 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். விடுதலைப் போராட்டக் காலத்தில் சித்தரஞ்சன்தாஸ் அவர்களால் பாரத மாதா கோயிலுக்கு அடிக்கல் நாட்டிய இடம் அது. அந்த இடத்தில் விடுதலைப் போராட்டத் தியாகிகளினுடைய வரலாற்றைச் சித்தரிக்கும் வகையிலும், அவர்களைப் போற்றும் வகையிலும், திருவுருவப் படங்களை அதில் நிறுவுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Keep silence please. *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாழ்நாள் முழுவதும், தன்னலமற்று பணியாற்றி, மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்த, மக்கள் போற்றும் தலைவர்கள், தமிழ்ச் சான்றோர்கள், தியாகச் செம்மல்கள் ஆகியோரின் சிறப்புகளையும், பெருமைகளையும் என்றென்றும் நினைவில் நிறுத்தி, போற்றிப் புகழ்ந்திடும் வகையில் இத்துறையால் 52 நினைவகங்கள், 3 அரங்கங்கள், 5 நினைவுத் தூண்கள் மற்றும் ஒரு நினைவுப் பூங்கா உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.*

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின், இந்த 11 மாத காலத்தில் மட்டும் மீனவர் சமுதாயத்திற்காகப் பாடுபட்ட, இந்தச் சமுதாயத்தில் அவதரித்த சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மற்றும் சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் ஆகியோருக்கும் சென்னையில் மணிமண்டபம் அமைக்கவும், கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் மொழிப்போர் வீரர் திரு. அ. சிதம்பரநாதன் அவர்களுக்கு திருவுருவச் சிலை அமைக்கவும், மொழிப்போர் தியாகி கீழப்பளுவூர் சின்னச்சாமி அவர்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருவுருவச் சிலை அமைக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

முற்பகல் 11–05

சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தியாகி தீரன் சின்னமலை அவர்களுக்கு சங்ககிரியில் நினைவுச் சின்னம் அமைக்கவும் மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த வாரத்தில் உத்தரவிட்டுள்ளார்கள். பெருந்தலைவர்களுடைய தியாகங்களுக்கு மதிப்பளித்து, செயல்படுகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நீங்கள் கொடுத்திருக்கின்ற இந்தக் கோரிக்கையைப் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரிவான அளவிற்கு விளக்கத்தை அளித்ததோடு, விடுதலைப் போராட்ட தியாகிகளுக்கு நன்றி செலுத்துகின்ற வகையிலும், அவர்களுடைய நீண்ட நாள் கனவினை நிறைவேற்றுகின்ற வகையிலும் செயல்பட்டிருக்கின்ற தமிழக அரசு நடவடிக்கைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, சுற்றுச் சுவரின் முகப்பில் நுழைவுவாயில்—ஆர்ச் அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டேன். ஆனால், தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அத்தகைய செலவினங்களை மேற்கொள்ள இயலாது என்று மாவட்ட நிருவாகம் தெரிவித்துவிட்ட நிலையில், சுற்றுச் சுவர் அமைக்கின்றபோதே அதன் முகப்பில் ஆர்ச்—நுழைவுவாயில் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

2012 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வைகைச்செல்வன் அவர்கள்.

டாக்டர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழிக்காக தன்னை அர்ப்பணித்தவர் தேவநேயப் பாவாணர் அவர்கள். அவர் உப்பைப்போல எளிமையானவர், மழை நீரைப்போல சுத்தமானவர். தமிழுக்காக தன்னையே கரைத்துக் கொண்டிருக்கிற தேவநேயப் பாவாணருடைய நினைவு மண்டபம், மதுரையிலே அமைந்திருக்கிறது. அந்த மணி மண்டபத்திலே, போதிய பணியாளர்கள் இல்லையென்று பல முறை தமிழறிஞர்கள் கோரிக்கை விடுத்த நிலையிலும்கூட, கருணாநிதியினுடைய அரசு அதற்குச் செவி சாய்க்கவில்லை. ஆகவே, இந்த நினைவு மண்டபத்தில் போதிய பணியாளர்களை நியமிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, நினைவு மண்டபத்தில் பணியாட்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

109—

இரத்த சேமிப்பு வங்கி

***1113—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட்ட மருத்துவமனைகளில் இரத்த சேமிப்பு வங்கியை அமைக்கவும், இரத்த தானத்தைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்திடவும் அரசு ஆவன செய்யுமா?